கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
முதலாம் வருடம் இரண்டாம் அரையாண்டு கலைமாணித் தேர்வு
2015/2016 (மே 2018)

## TL 1212 இலக்கியமும் மானுடவாதமும்

நேரம்: 02 மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பகுதியில் இருந்தும் இரு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி I

1. (அ) 'மானுடவாதம்' என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது யாது? (05 புள்ளிகள்)

   (ஆ) மானுடவாதக் கண்ணோட்டத்தின் படிநிலை வளர்ச்சி குறித்து விளக்குக. (15 புள்ளிகள்)

2. (அ) சங்கமருவிய காலத்தில் அற நூல்கள் அதிகம் தோன்றியமைக்கான சமூகத் தேவை யாது? (05 புள்ளிகள்)

   (ஆ) அக்கால அற இலக்கியங்களில் ஒன்றான திருக்குறள் மக்களின் வாழ்வுக்கு வழிகாட்டியாக அமையுமாற்றை எடுத்துக் காட்டுக. (15 புள்ளிகள்)

3. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குக் குறிப்புரை எழுதுக.

   (அ) சங்கப் புறப்பாடல்களில் மானுடநேய உணர்வு வெளிப்பாடு.

   (ஆ) பாரதியாரின் கவிதைகளில் மனிதகுல விடுதலை.

   (இ) வள்ளலாரின் 'ஆன்மநேய ஒருமைப்பாட்டுக்' கொள்கை

   (10 x02 = 20 புள்ளிகள்)

### பகுதி II

4. பல்லவர்காலப் பக்தி இலக்கியங்களில் மனிதநிலைப்பட்ட உணர்வுநிலை வெளிப்பாடு என்பது முதன்மைப்படுமாற்றை எடுத்துக் காட்டுக. (30 புள்ளிகள்)
5. கம்பராமாயணப் பாத்திரப் படைப்புகளின் ஊடாக கம்பனின் மானுட நோக்கு வெளிப்படுமாற்றை விபரிக்குக. (30 புள்ளிகள்)
6. தமிழ் நாவல்களில் சாதாரண மக்களின் பல்வேறுபட்ட சமூகப் பிரச்சினைகளும் வாழ்வியல் அவலங்களும் பேசப்பட்டு வந்துள்ளமையை உதாரணங்கள் ஊடாக எடுத்துக் காட்டுக. (30 புள்ளிகள்)